# மன்னார் மாவட்டத்தில் போத்துக்கேயர் ஆட்சியில் ஏற்பட்ட பண்பாட்டு மாறுதல்: தலைமன்னார் தொடக்கம் தோட்டவெளி வரையான பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**சுஜானிக்கா, செ. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sujanisacred96@gmail.com

*தென்னாசியாவிலே பல்லினப்பண்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதற்கு வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து பல இன, பண்பாடுகள் கொண்ட மக்கள் பிற நாடுகளில் இருந்து இங்கு வந்து சென்றதும் அவர்கள் சில பண்பாட்டு மரபுகளை நிரந்தரமாக விட்டுச் சென்றதும் காரணமாக அமைந்துள்ளது. அந்தவகையிலே கி.பி 1505ஆம் ஆண்டு இலங்கைக்கு ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்கேயர்கள் வந்தனர். இவர்களின் வருகையானது இலங்கையின் வடபகுதியிலே பல பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக வடபகுதியான யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளிலே இவர்களுடைய பண்பாட்டு மாற்றத்தினை அதிகம் காணக் கூடியதாக இருக்கின்றது. இவற்றில் மன்னார் பிரதேசத்தினை மையமாகக் கொண்டே இந்த ஆய்வுக்கட்டுரையானது அமைகின்றது. வரலாற்றுக்காலம் முதலே அரசியல், பொருளாதாரம், பண்பாட்டுச் செல்வாக்கு பெற்ற இடமாக இது காணப்படுகின்றது. அந்த வகையில் போர்த்துக்கேயரது வருகைக்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்துத் தமிழ்ப் பண்பாடு நிலவிய இந்த மன்னார் பிரதேசமானது காலப்போக்கில் போர்த்துக்கேயரின் வருகையின் விளைவாக முன்பிருந்த பண்பாட்டு முறைகள் நலிவுற்று போர்த்துக்கேயரின் பண்பாட்டு முறைகளினை பின்பற்றி வருவதாக மாற்றம் கண்டுள்ளது. இத்தகைய பண்பாட்டு முறை அரசியல், பொருளாதாரம், கலை, சமூகம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் மாறுதல்களினை ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தகைய பண்பாடட்டு முறைகளின் மாற்றத்தினை தொல்லியல், இலக்கிய சான்றாதாரங்களின் ஊடாக தொல்லியல் மற்றும் வரலாற்று அணுகு முறைகளினைப் பின்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்கான தரவானது பேரத்துகேய ஆவணங்களில் இருந்தும் கள ஆய்வுகள், நேர்காணல்கள், மற்றும் இரண்டாம்தர நூல்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இப்பிரதேசத்தில் உள்ள தொல்லியல் சின்னங்கள் நடுநிலைமையுடன் ஆராயப்பட வேண்டும். இதனூடாக இப் பிராந்தியத்தின் தொன்மையினை புரிந்து கொள்ள முடியும். .*

**திறவுச்சொற்கள் :** பண்பாடு, ஐரோப்பியர், போர்த்துக்கேயர்